இருவர்

காமாட்சி

“காமாட்சிக்கு என்னடி, கற்கண்டென கணவன் வாய்ப்பான்; அவள் அழகிற்கே நீ, நான் என்று போட்டி போட்டுக் கொண்டு வருவார்களே'' எனத் தெருவார் பேசிக் கொள்வார்கள்.

''தங்கச் சிலையடி காமாட்சி! தங்கச்சிலை பேசாது; நம் காமாட்சி பேசுவாள், ஆடுவாள்; அவளுக்கு வாய்க்கும் கணவனின் அதிர்ஷ்டம்'' என, என் தோழிகள் பேசிக் கொள்வார்கள்.

''சிடுசிடுத்த முகத்தையே நான் பார்த்ததில்லை – சிரித்த முகத்துடனேயே காட்சியளிப்பாள்; சுடு சொல் பேசி ஒரு நாளும் கண்டதில்லை; சோம்பி இருப்பதே கிடையாது–தங்கமான குணம்'' இப்படி என் சுற்றத்தார்கள் என்னைப் போற்றிப் புகழ்வார்கள்.

இப்படிப்பட்ட புகழ் வார்த்தைகளைக் கேட்ட என் பெற்றோர்கள் பூரிப்படைந்தனர்.

பூரிப்பு மங்கியது; பெருமூச்சு விடத் தொடங்கினர்; பெற்றோர்கள். பணமில்லாத காரணத்தால் மணம் செய்துகொள்ள முற்படவில்லை, சுற்றத்தினர் 'பஞ்சைகளிடமா பெண் கொள்வது?'' என்ற பரிகாசச் சொல்லை வீசி நின்றனர்.

பருவமடைந்து ஆறு ஆண்டுகள் கடந்து விட்டன. பரிவு கொள்வார் எவரும் இல்லை. பாலைவனத்தில் பெய்யப்பட்ட மழையென ஆயிற்று என் பருவமும் அழகும்.

இப்படி அவதிப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில்தான், சந்தப்பேட்டை என்ற கிராமத்திலிருந்து வந்த சுந்தரம் என்பவருக்கு, நான் மணம் செய்விக்கப்பட்டேன்.

மணம் நடைபெற்றது - ஆனால், அழகி என வர்ணித்த தெருவினரும், குணவதி என் போற்றி, பணமில்லாத காரணத்தால் பஞ்சைகளெனத் தூற்றி மணம் செய்து கொள்ள முன்வராத சுற்றத்தினரும் வரவில்லை, வராதது மட்டுமல்ல வம்பளக்கவும், ஆரம்பித்துவிட்டார்கள்.

''நம் ஜாதி என்ன? அந்தச் சுந்தரத்தின் ஜாதி என்ன? அவர்களுக்கும் நமக்கும் கொள்வினை கொடுப்பினை கிடையாதே அவர்கள் முதலியார்தான் என்றாலும், எந்தத் தரத்தார்? அவர்களிடம் இவர்கள் சம்பந்தம் செய்து கொள்ளலாமா?'' எனக் கேள்விக் கணைகளைப் பூட்டி ஜாதிக் கட்டுப்பாடும் செய்துவிட்டார்கள்.

இந்தக் கட்டுப்பாடு, என் அண்ணனின் காதலுக்குத் தடை போட்டுவிட்டது. கண் கலங்கி நிற்க வேண்டியவனானான், என் அண்ணன்.

இரத்தினம் :

கண்கலங்கித் தவித்தேன் - என் தங்கையின் வாழ்வு பாழ்பட்டு தாழ்நிலையில் சென்று விடுமோ என்று. சுந்தரத்தால் சுகம் பெற்றாள், களிப்பெய்தினேன். நானும் கடிமணம் செய்து காதல் மங்கையோடு இன்புற்றிருக்கலாம் என்று.

களிப்பு கருகியது. கட்டுப்பாடு செய்துவிட்டார்கள் ஜாதிக் கட்டுப்பாடு - தங்கையை தாழ்ந்த ஜாதியில் மணம் செய்து விட்டோம் என்று காரணம் கூறி, காதல் கொண்டிருந்த அத்தை மகளைக் கண்ணெடுத்தும் பார்க்கக்கூடாது என்று பலமான உத்தரவு போட்டுவிட்டார்கள். பதைத்தேன் நான் - பரிதவித்தாள் என் அத்தை மகள், அஞ்சுகம். வேதனைப்பட்டோம்! வேறு வழி கிடையாதே, ஜாதிக் கட்டுப்பாட்டைக் கடப்பவர்களுக்கு. இதை இந்தச் சமுதாயம் ஏற்படுத்திய சட்டமாயிற்றே!

சட்டத்தைக் காட்டி, கட்டுப்பாடு செய்து காதலை மாய்க்கும் இக்கயவர்கள், என் தங்கை ஆறாண்டாக பருவமெய்திருந்த பொழுது பஞ்சைகளெனப் பரிகசித்து நெஞ்சில் இரக்கமில்லாமல் ஏசினர்! அன்று ஏனென்று ஏறெடுத்துப் பாராதவர்கள், இன்று ஏன் இப்படிச் செய்தாய் என்று கேட்கிறார்கள். இது என்ன முறையோ? இது என்ன சட்டமோ? இந்தச் சட்டத்திற்குப் பக்கமேளம் கொட்டும் இது என்ன சமுதாயமோ?

கேலியும் கிண்டலும் கண்ட இடங்களில் கிளம்பின! ஏசலும் ஏளனமும் எல்லாத் திசைகளிலிருந்தும் நோக்கி வந்தன. என்ன செய்வது இதற்கு என யோசித்தேன்: ஒரு முடிவுக்கு வந்தேன்.

முடிவு – ஒரே முடிவுதான்! மூடச் சமுதாயத்தின் முனகலை ஒழிக்க – வாயை அடைக்க – விழியைத் திறக்க – சாவுதான் சிறந்த முடிவு!

சந்தப்பேட்டை அடைந்தேன்; காமாட்சியைக் கண்டேன். அவள் கண்ணீர் விட்டாள் – என் நிலையினை எண்ணி தன் கணவன் ஒரு குடிகாரன், சூதாடி, குடும்பப் பொறுப்பற்றவன் என்ற தன் நிலையினைக் கூறிக் குமுறினாள்.

காதலால் தவிக்கும் நான்.

கயவனிடம் சிக்கிச் சீரழியும் தங்கை.

ஜாதிக் கட்டுப்பட்டால் பாதிக்கப்பட்ட குடும்பம்

இரவு முழுவதும் இவைகள் யாவும் என் கண்முன்னே நிழற்படமென காட்சி தந்து கொண்டிருந்தன.

பொழுது புலர்ந்ததும், காமாட்சியை ஊருக்கு அழைத்துச் செல்வதாக சுந்தரத்திடம் கூறி, காமாட்சியை அழைத்து வந்தேன்.

காமாட்சி

நான் களிப்புடன் கிளம்பினேன், அண்ணனுடன் – பிறந்த ஊருக்கு. வரும் வழியெல்லாம் எங்கள் வேதனை வாழ்வை, ஒருவருடன் ஒருவர் பரிமாறிப் பேசிக்கொண்டு வந்த காரணத்தால், எத்திக்குச் செல்கிறோம் என்பதை நான் அறியவில்லை. பேச்சு நின்றதும் கவனித்தபொழுது பவழவேற் காட்டுக்குச் செல்லும் பாதை என்பதை அறிந்தேன்.

''ஊருக்குத்தானே போகிறோம்? ஏன் இந்த வழியிலே வந்துவிட்டாய்?'' என என் அண்ணனைக் கேட்டேன், என்னைப் போன்றே அவனும் பாதையைக் கவனிக்கவில்லையோ என எண்ணி.

அவன் கண்கள் கலங்கின பதில் சொல்லவில்லை.

''என்ன அண்ணா! ஏன் கலங்குகிறாய்? நீ ஊருக்குப் போகவில்லையா? எங்கே போகப் போகிறாய்'' என நான் மீண்டும் கேட்டேன்.

அவன் கண்கள் கலங்கின பதில் சொல்லவில்லை.

இரத்தினம் :

எங்கே என்னை அழைத்துச் செல்கிறாய் அண்ணா? என என்னைக் கேட்கிறாள் என் தங்கை. நான் எப்படிச் சொல்லுவேன் – உன்னை ஜாதிச் சண்டை – சமூகச் சண்டை அற்ற சாவு பூமிக்கு அழைத்துச் செல்கிறேன் என்று. அவள் வாழ்ந்தால் போதும் என்றிருந்த நானா அவளை சாவை நோக்கி அழைத்துச் செல்கிறேன் என்று கூறுவது.

கூறாமல் என்ன செய்வது? சுற்றத்தார் தூற்ற, கொண்ட கணவனோ குடும்பப் பொறுப்பற்றவனாய் திரியும் தங்கையின் வாழ்விலே இனி இன்பம் ஏது? காதலுக்குக் கதவடைப்புச் செய்துவிட்ட எனக்குத்தான் "இன்பம் ஏது இனி? இன்பமற்ற வாழ்வு வாழ்வதைவிட இறப்பதே மேலல்லவா?

இறப்பது குற்றமல்லவா என்று கேட்பீர்கள். யோசித்துக் கூறுங்கள் இது யார் குற்றமென்று ஏழை என்று எள்ளி நகையாடி, என் தங்கையை மணம் செய்து கொள்ள முன்வராத உறவினர்கள் குற்றமா? அந்த உறவினர்கள்மனதிலே ஜாதி என்ற பாகுபாட்டைப் புகுத்தி வைத்திருக்கும் சமுதாயத்தின் குற்றமா? யார் குற்றம் எங்கள் சாவின் முடிவிற்கு? என்று நீங்கும் இந்த நாட்டை விட்டு, இக்குற்றம்? எங்களைப் போன்றவர்கள் இறந்த பிறகாவது இக்குற்றம் நீங்குமா?

என் தங்கைக்கு ஒருவாறு என் நிலையைத் தெரிவித்தேன்.

மறுப்பாள் என எதிர்பார்த்தேன் – மன மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டாள், என் சொல்லை.

''குடும்பத்துக்கு என்னால் இழிச் சொல்! என் வாழ்விலும் இன்பம் இல்லை!! உன் காதலுக்கும் இடமில்லை!!! இந்த வாழ்வு வாழ்வதைவிட இறப்பதே மேல்'' அண்ணா எனக் கூறினாள்.

பழவேற்காடு வந்தோம் இரவு மணி ஒன்பதும் ஆயிற்று.

அனைத்தும் காத்து இரட்சிக்கும் ஆண்டவனின் திருக்கோயில் சென்றோம். அவனை வணங்கினோம் எங்கள் உள்ளக் குமுறலோடு.

'' ஆண்டவனே, நீதானே யாவரையும் படைத்தாய், அதில், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று ஏன் படைத்தாய்? ஏழை பணக்காரன் என ஏன் உண்டாக்கினாய்? எல்லோரும் இன்புற்றிருக்கும் ஏற்ற வழியை, நீ ஏன் செய்யவில்லை''

என்றெல்லாம் கேட்டுக் கதறினோம். அவர் கேட்டாரோ இல்லையோ அதுபற்றி நாங்கள் கவலைப்படவில்லை.

எல்லோரையும் படைத்த ஆண்டவனுக்கு அர்த்த ஜாம பூஜையும் ஆயிற்று. அனைவரும் கோயிலை விட்டு வெளியேறி விட்டனர். நாங்கள் மட்டும் கோயிலினுள் பதுங்கியிருந்தோம்.

நடுச் சாமம். என் தங்கையை – எங்கள் குடும்பத்துக்கு இழிவு உண்டாக்கிவிட்டதாக மற்றவர்கள் கருதிய என் தங்கையை குளத்தில் தள்ளினேன் – ஆண்டவனின் திருக்குளத்தில் தள்ளி விட்டேன். நானும் குதித்தேன், குளத்தில்!

ஜாதி எனப் பேசும் சதிகார சமூகமே! உனக்குச் சந்தோஷம்தானே!

இப்படிப்பட்ட சண்டாளர்களையும் படைத்து இரட்சிக்கும் ஆண்டவனே!–உனக்கும் மகிழ்ச்சிதானே எங்கள் இருவரின் முடிவுகள்!

5-7-1953

❄ ❄ ❄ ❄ ❄